RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் இலட்சிய இந்தியப் பெண்மை

தி. ஹேமாவதி [அ] *, ப. விமலா [அ]

[அ] தமிழ்த்துறை, முதுகலை தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600 032,

# Rajam Krishnan's Concept of Indian Womanhood: A Feminist Perspective

**T. Hemavathy [a, *], P. Vimala [a]**

[a] Department of Tamil, PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai – 32

*Corresponding Author: hemavathyvenkat1@gamil.com

Received: 29-12-2025
Revised: 24-02-2026
Accepted: 06-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Education is one of the most fundamental factors shaping individual lives and national development. It enhances the quality of life by enabling individuals to think critically, act responsibly, and live with dignity and self-respect. Through education, people overcome ignorance and acquire the knowledge and confidence necessary for personal and social progress. Historically, however, educational opportunities were largely reserved for men, while women were denied access to formal learning. Traditional social attitudes confined women to domestic responsibilities, arguing that education was unnecessary for those expected only to manage households and raise children. As a result, women were deprived of basic rights, opportunities, and the freedom to make decisions about their own lives. Even in the centuries following the Sangam period and before the emergence of the Self-Respect Movement, women continued to experience social inequality, restricted rights, and various forms of oppression. Despite these constraints, women have always played an indispensable role in sustaining families and society. It is widely recognized that educating a woman benefits not only her own life but also contributes to the educational, social, and economic advancement of future generations. Women's education promotes gender equality, delays early marriage, strengthens family health, and contributes significantly to national development. In her writings, Rajam Krishnan advocates a vision of the ideal Indian woman grounded in education, self-confidence, courage, and social responsibility. She portrays education as both a foundation for women's empowerment and a powerful instrument for achieving independence, self-respect, and meaningful participation in society. Her works emphasize that the progress of women is inseparable from the progress of the nation and highlight the importance of providing equal educational opportunities for all. This article examines Rajam Krishnan's concept of the ideal Indian woman, focusing on her views regarding women's education, empowerment, and social transformation. The study demonstrates that her literary vision challenges traditional gender inequalities while promoting education as the key to women's liberation and the holistic development of society.

**Keywords:** Women education, Feminist Perspective, Rajam Krishnan, Self-Respect

## முன்னுரை

மனிதனின் வாழ்க்கைக்கு மிக முக்கியமானவை கல்வியாகும். இவற்றைச் சார்ந்தே நாட்டின் வளர்ச்சியும் அமைக்கிறது. கல்வி ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது. சிந்தித்துச் செயல்படுவதற்கும், சுயமரியாதையுடன் வாழ்வதற்கும் கல்வி உதவுகிறது. கல்வியுடையவன் தன் வாழ்க்கையில் உள்ள இருளை நீக்கி வெளிச்சத்தைப் பெறுகிறான்.

இத்தகைய கல்வியை ஆண்மகனுக்கு மட்டும் அளித்து பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. அடுப்பூதும் பெண்களுக்கு கல்வி எதற்கு என்று கூறினர். குழந்தைகளைப் பாதுகாத்து வீட்டுவேலைகள்

செய்து வாழ்ந்தால் போதும் என்று அவர்களை வீட்டிற்குள்ளே முடக்கிவைத்தனர். தனக்கு வேண்டியவைகளைக் கேட்பதற்குக் கூட அவர்களுக்கான உரிமைகள் இல்லாமல் இருந்தனர்.

சங்ககாலத்திற்கு முன் பெண்கள் சுதந்திரமாக செயல்பட்டிருப்பதை நாம் புராணக்காலப் பெண்கள் மற்றும் ஔவையார் போன்ற பெண்பாற்புலவர்கள் மூலம் அறியப்படுகிறது. அதன்பிறகுப் பெண்கல்வி பரவலாக இருந்ததாக தெரியவில்லை.

இக்காலத்திற்குப் பிறகு வந்த கவிஞர்கள் பாரதியார், பாரதிதாசன், பெரியார் போன்றோர் பெண்களுக்கானக் கல்வி, திருமணம், சொத்துரிமை, கணவன் இறந்தவுடன் மனைவியும் உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம் போன்ற செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பெண்களுக்கான உரிமைகள் என்னவென்று அவர்கள் அறியும் வகையில் பல்வேறு போராட்டங்கள், விதிமுறைகள், பாடல்கள், கவிதைகள் என பெண்களுக்கு விழிப்புணர்வுட்டும் செயல்களைச் செய்துள்ளனர். அதுமட்டும் இல்லாது பெண்களுக்கெனச் சுயமரியாதை இயக்கம், பெண்கள் இயக்கம் என பல்வேறு இயக்கங்கள் தொடங்கி இவ்வியக்கியத்திற்குப் பெண்களையே நடத்தும் வகையில் பெண்களை வழிநடத்தியுள்ளனர் என்பதை இவ்வியக்கங்களின் மூலம் அறியப்படுகிறது.

ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் சாதித்துள்ளனர். அப்படி சாதித்த பெண்கள் ஏராளமானவர்கள். உதாரணமாக வேலு நாச்சியார், கல்பனா சாவ்லா, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், பீ.டி உஷா, கஸ்தூரி பாய், நாகம்மையார், மணியம்மையார், கன்னம்மாள், என சாதித்த பெண்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

எத்தனையோ பெண்கள் தன் உரிமைகளுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டுப் பல்வேறு துறைகளில் சாதித்துக்கொண்டு இருந்தாலும், இன்னும் சில இடங்களிலும், வீடுகளிலும் பெண்கள் உரிமைகள் இல்லாமல் இருந்து வருகின்றனர் அதாவது “இந்நாட்டில் எல்லா உயிர்களிடத்தும் மேலாக ஆன்மிகம் இயங்குகிறது என்ற கருத்து நிலவிய போதும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே எத்துணை வேற்றுமை? ஆண்கள் பெண்களை வெறும் இயந்திரங்களாக, உழைக்கும் உயிர்களாக மாற்றியிருக்கின்றனர். வேத கால உணர்வுகள் இழிந்து (பிராம்மண) குருபீடங்கள், ஏனைய சாதியார் வேதங்களைப் படிக்கக் கூடாது என்று தடை விதித்த போது பெண்களின் உரிமைகளையும் நசுக்கிவிட்டது என்று அவர் மனம் வருந்திக் கூறி இருக்கிறார்.”[1] (இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, ப.113) இச்செய்தியினை இராஜம் கிருஷ்ணன் தன் நூலில் எடுத்துரைத்துள்ளார்.

## பெண் கல்வி

பெண் கல்வி கற்பதால் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்கும். ஒரு பெண் கல்வி கற்பதால் அக்குடும்பமே கல்வி கற்றதற்கு சமம். அவள் தலைமுறையே அறிவுள்ளவர்களை உருவாக்குவாள். ஆகவே பெண்களுக்கு கல்வி முக்கியத்துவத்தை பல்வேறு கவிஞர்கள், அறிஞர்கள், புலவர்கள் தன் பாடல்களில், கவிதைகளின் மூலம் எடுத்துக் கூறியுள்ளனர். கல்வியின் விழிப்புணர்வைப் பற்றி பாரதிதாசன் மிக அருமையாக எடுத்துரைத்துள்ளார்.

“கல்வியில்லாத பெண்கள்

களர்நிலம் அந்நிலத்தில்

புல் விளைந் திடலாம் நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை!

கல்வியை உடைய பெண்கள்

திருந்திய கழனி; அங்கே

நல்லறிவு உடைய மக்கள்

விளைவது நவிலவோநான்.”[2] (குடும்ப விளக்கு, பாரதிதாசன், ப.38)

கல்வியறிவு இல்லாத பெண்கள் களர் நிலமாகும். அதாவது அந்நிலத்தில் நற்பயிர்கள் விளைவதில்லை. கல்வியறிவுடையவர் பயன்படும் நன்செய் நிலமாகும். அந்நிலத்தில் நமக்குத் தேவையான உணவு பொருட்கள் விளையும். அதுபோல கல்வியறிவுடையப் பெண்கள் இருக்கும் வீட்டில் அறிவுடைய மக்கள் உருவாகுவர் என்று பாவேந்தர் பாரதிதாசன் பெண்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை இக்கவிதையின் மூலம் விளக்கியுள்ளார்.

## ஆண்களுக்கு நிகராக பெண்கள் பணிப்புரிதல்

ஆண்கள் மட்டும் திறமையுடையவர் அல்ல. பெண்களும் திறமைச்சாலிகள். ஆண்களைவிட நிறையத்துறைகளில் பெண்கள் சாதித்துள்ளனர். அதுமட்டும் இல்லாது ஆண்களுக்கு மேலாக பெண்கள்

நிறைய துறைகளில் இயங்கி வருகின்றன. அதாவது "ஆண்களுக்கு எந்த எந்தத் துறைகளிலெல்லாம் கல்வி பயில்விக்கப்படுகிறதோ, அவ்வளவு துறைகளிலும் பெண்களுக்கும் கல்வி போதிக்கப்பட வேண்டியது அவசியம். பெண்களுக்கு உடற்பயிற்சியும் உடற்கூற்றுக் கல்வியும் கற்றுக் கொடுக்க வேண்டியது எல்லாவற்றையும் விட மிக அவசியம். கர்ப்பத்தடை, பிரசவம், குழந்தையைப் பேணுதல், சுகாதாரம், அவசர சிகிச்சை முறைகள் முதலிய துறைகளில் கல்வி புகட்ட வேண்டியது அவசியம். பெண்களுக்கு ஆண்களைப் போலவே, கலெக்டர் முதல் போலீச் கான்ஸ்டபிள் வரையிலுள்ள நிர்வாக உத்தியோகங்களையும் கொடுக்க வேண்டும். உலகில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு போட்டி போட்டு வெற்றி பெற்றிருக்கின்றனர்."[3] என்பதை பெரியாரின் பேச்சுக்கள் மற்றும் எழுத்துக்களின் மூலம் எடுத்துரைத்துள்ளார். (இதழாளர் பெரியார், ப.246).

## புராணக்காலப் பெண்கள்

புராணக்காலங்களில் ஒரு பெண் தான் விரும்பி மணவாளனை தேர்வு செய்யும்போது, ஆண்மகன்களுக்குப் போட்டிகள் வைத்து தன் கணவனைத் தேர்வுச் செய்வதுண்டு. சிலப்பதிகாரத்தில் தன் கணவன் கள்வன் கிடையாது என்று பாண்டிய மன்னன் அவையில் தைரியமாக எடுத்துரைத்து மதுரை மாநாகரத்தையே தன் கோபத்தீயால் எரித்தவள். மகாபாரத்தில் பாஞ்சலி என்னும் திரௌபதியின் துயில் உரித்தபோது அவள் மன உறுதியும், அவள் இறைவன் மீது கொண்ட பற்றின் மூலம் அவள் துயில் இழுக்க இழுக்க புடவைச் சுரந்துக்கொண்டே இருந்ததை நாம் மாகாபாரத்தின் வாயிலாக அறியமுடிகிறது. அதுமட்டுமில்லாது, மகாபாரதம் என்னும் போர் உருவாகுவதற்கு காரணமே திரௌபதியாகும். இராமயணத்தில் தன் கற்பின் தூய்மையை நிரூபிப்பதற்காகத் தீயில் இறங்கினாள். தன்னால் தன் கணவருக்கு அரசாட்சியில் எழுந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகக் கர்ப்பம் தரித்த நிலையிலும் கானகம் சென்று தனி ஒரு பெண்ணாகத் தன் இருப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தாள். இவள் தைரியத்தினை முன்னோடியாகக் கொண்டு நிறைய பெண்கள் தன் வாழ்வில் பின்பற்றுவதுடன், இன்றளவும் சீதையின் துணிச்சலை மக்கள் புகழ்வதுண்டு. அதாவது, "இந்தியப் பெண்கள் சீதையின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். சீதை ஒப்பற்ற பெண்ணரசி, இந்தியப் பெண்மையின் இலட்சிய வடிவம். இவள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் தூய ஒழுக்கத்துக்கும் எத்தனை துன்பங்கள் மேலிடினும் அசையாமல் பொறுக்கும் சக்திக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறாள். இந்த இலட்சியம், நமது இந்தியப் பெண்ணின மரபுகளில் வழிவழியாக நாடி நரம்புகளில் ஓடிக்கொண்டிருக்கிறது. இதை எவரேனும் மாற்ற முயன்றால், நமது பெண்குலத்திலிருந்து சீதையின் இலட்சியத்தை அகற்றிவிட்டால் அது முன்னேற்றமில்லை.பெருந்தோல்வியே ஆகும்."[4] என்று தன் சிறுக்கதை ஆகிய லட்சியப் பெண்கள் என்னும் நூலின் மூலமாக இராஜாம் கிருஷ்ணன் கூறியுள்ளார். (இந்திய இலட்சியப் பெண்மை, ப.114) அக்காலத்தில் பெண்களுக்கு அனைத்து உரிமைகள் இருந்திருப்பதையும், அவர்கள் துணிச்சலுடனும், தைரியத்துடனும் இருந்துள்ளனர் என்பதை இச்செய்தியின் மூலம் அறியப்படுகிறது.

## பெண்பால் புலவர்கள்

சங்ககாலத்தில் உள்ள பெண்கள் கல்வியறிவுப் பெற்று திகழ்ந்துள்ளனர் என்பது அவர்கள் பாடிய பாடல்கள், கவிதைகள் மூலம் அறியமுடிகிறது. அதுமட்டுமில்லாது, மன்னர்களுக்கு அறிவுரை வழங்கும் அவைக்களப்புலவராகவும் பெண்கள் இருந்துள்ளனர். மன்னர்களின் அரசாட்சியும், வீரத்தையும், ஊரின் சிறப்பினையும், இறைவனின் மீது கொண்டப் பக்தி மற்றும் காதல், என பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளனர். அப்படி பாடிய பெண்பால் புலவர்கள் மொத்தம் 32 பேர் ஆவர். காரைக்கால் அம்மையார், ஔவையார், அஞ்சில் அஞ்சியார், அஞ்சியத்தை மகள் நாகையார், அள்ளூர் நன்முல்லையார், மாசாத்தியார், இளவெயினி, வெள்ளி வீதியார், பொன்முடியார் போன்றோர் என நிறையப் பேர் உள்ளனர். இவர்களில் ஒருவர் சிறுக்குழந்தைகளும் அறியும் வண்ணம் அனைவரின் மனதில் வரக்கூடியவர் ஔவையார் ஆவர். அவர் எழுதிய பாடல் ஒன்றை நாம் காணலாம்.

"சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே

பெரியகட் பெறியனே

யாம்பாடத் தாம் மகிழ்ந்து உண்ணும் மன்னே"[5] (தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியம், ப.74)

உயிர்காக்கும் சிறு நெல்லிக்கனியை தனக்கொடுத்து, உணவருந்தும் போது தன் பாட்டினை கேட்டுக்கொண்டு மகிழும் அதியமானை பற்றிச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

ஒரு குழந்தையைப் பாதுகாப்பாக வளர்ப்பது பெற்றோர்களின் கடமையாகும். ஆனால் தன் சுயநலத்திற்காக தன் குடும்பத்தை நெர்கதியாக விட்டுவிடுகின்றனர். இருப்பினும் ஒரு பெண் தைரியத்துடனும், துணிச்சலுடனும் செயல்பட்டால் வாழ்வில் உள்ள அனைத்து துன்பத்தையும் பனிப்போல் விலக்கிவிடலாம் என்பதற்கு அம்மையார் சிறந்த எடுத்துக்காட்டானவர். “மூவலூர் அம்மையார் இளமையிலேயே பல துன்பங்களுக்கு ஆட்பட்டவர். குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத அவருடைய தந்தையார் வீட்டை விட்டு ஓடி விட, தாயார் அவரை ஒரு தாசியிடம் 10 ரூபாய் பணமும் பழைய புடவையும் பெற்றுக் கொண்டு அவர் தூங்கும் போது பிரிந்து சென்றுவிட்டார். இளம் பெண்ணாக இராமாமிர்தம் வளர்ச்சி அடைந்த போது, அவரை வளர்த்த தாசியம்மையார், அவரை 60 வயது நிறைந்த ஒரு பணக்காரக் கிழவருக்கு மணம் செய்ய விரும்பினார். இராமாமிர்தம் அதை எதிர்த்துக் போராடி, தாம் காதலித்தவரை துணிந்து மணந்துக் கொண்டார். இதனால் கோபம் அடைந்த தாசி குலத்தவர்கள் அவர் மீது கொலைக்குற்றம் சாட்டினர். அதிலிருந்து மீண்டு, தன் உண்மை நிலையை உலகிற்கு உணர்த்தினார் அம்மையார். அப்போது பல துன்பங்களை அனுபவித்துள்ளார். நஞ்சு கலந்த பாலைக் கொடுத்து அவரைச் சாகடிக்க முயற்சித்த போது, அதிலிருந்து தப்பினார். இத்தனைத் துன்பங்களுக்கும் காரணம் தன்னை வளர்த்தெடுத்த தாசிக்குலப் பெண்களின் அறியாமையும், இழிநிலையும்தான் என்பதை உணர்ந்து, அவர்களை வாழ்வில் உயர்த்த வேண்டும் என்று உறுதி கொண்டார். அது முதல் ‘பொட்டுக் கட்டுதல்’ என்று சொல்லப்படும் தேவதாசி முறையை ஒழிக்கப் பாடுபடலானார்.”[6] மூவலூர் அம்மையார் தான் அனுபவித்த துன்பத்தில் இருந்து தன்னை காப்பாற்றிக்கொண்டது மட்டுமில்லாது, தாசிக்குலத்தில் பிறந்து துன்பப்பட்டுக்கொண்டிருந்த நிறைய பெண்களையும் காப்பாற்றி அவர்களுக்கு புதுவாழ்வினைத் தொடக்கி வைத்த பெருமைக்குரியவர் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் என்று சொன்னால் அது மிகையாகது.

## நிவேதிதா ஆங்கில பெண்மணி

நிவேதிதா அயர்லாந்தைச் சார்ந்தவர். சுவாமி விவேகானந்தரால் ஆன்மீகத்தில் ஈர்க்கப்பட்டு இந்தியாவிற்கு வந்தவர். சமூக தொண்டாற்றுவதில் தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர். பல்வேறு சீர்த்திருத்தப் பணிகளை மேற்கொண்டவர். அதை செயல்படுத்தியும் காட்டியவர். கல்வியறிவு இல்லாத பெண்களுக்கு கல்வி பயில்வதற்காக பள்ளிகளை தொடங்கியவர். நோய்களால் பாதித்து துன்பப்பட்டவர்களுக்கு உதவிபுரிந்தவர். ஆண்களுக்கு நிகராக இந்திய சுதந்திரப்போராட்டத்தில் பங்காற்றினார். இந்திய தேசியக்கொடியினை வடிவமைத்த பெருமைக்குரியவர். ஆண்கள் பெண்கள் இருவருக்கும் ஆயுதப்பயிற்சியினைக் கற்றுத்தந்தவர். பெண்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இந்துள்ளார் என்பதை இராஜம் கிருஷ்ணன் நிவேதிதாவின் மன உறுதி, வீரச்செயல்களை பெண்கள் அறிந்துக்கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்துள்ளார்.

## கஸ்தூரிபாய்

கணவருக்கு கட்டுப்பட்டு நடக்கும் பெண்களில் கஸ்தூரிபாய் அம்மையாரும் ஆவர். காந்தியாக அறியப்பட்டவர். மகாத்மா கந்தி என்று போற்றுவதற்கு உறுதுணையாக இருந்தவர் கஸ்தூரிபாய் அம்மையார் என்று சொன்னால் அது மிகையாகாது. தன் கணவரின் ஒவ்வொரு சுதந்திர போரட்டத்திலும் உறுதுணையாக நின்று செயல்பட்டு வெற்றி பெற்றவர். ஏன் கணவருடன் சிறைச் சென்று சிறைதண்டனையும் பெற்றவர். தம் நாட்டின் கலாச்சாரப்பெண்ணாகவும், கணவருக்கு உற்ற துணைவியாராகவும், கருப்பு இனத்தவருக்காக குரல் கொடுத்த தைரிய பெண். “‘இந்தியப் பெண்மை’ என்ற ஒரு முழுவடிவத்துக்கு, கஸ்தூரிபா எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகிறார். தம்முடைய தனித்துவம் என்ற சிந்தனையை, கணவனின் ஆணையுடன் ஐக்கியப்படுத்தி, அவர் போற்றிய கற்பின் வடிவமாகத் திகழ்ந்த அன்னை, சிறையில் கணவர் மடியில் உயிர் நீத்தார். இந்தப் பத்தினி வடிவம், இந்தியப் பெண்மைக்கு முரண்பாடான கணவனை இழந்த கோலத்துக்கு உட்படாதது, மிகமிகப் போற்றுதற்குரியதாகிவிட்டது. கற்புடைய மகளிர் கணவர் கண்கலங்க, முன்னதாக மங்கலப் பொருட்களுடன் இறுதியை ஏய்தினர் என்ற இந்திய நம்பிக்கைக்கு உதாரணமாகத் திகழ்கிறார் கஸ்தூரிபாய்.”[7] (இந்திய லட்சியப் பெண்மை ப.115) இத்தகைய சிறப்புகுரியவர்.

## முடிவுரை

சங்ககாலத்திற்குப் பிறகும், சுயமரியாதை இயக்கத்திற்கும் இடைப்பட்டக்காலத்தில் பெண்களின் உரிமைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கை அடிமைபட்டுள்ளன என்பது அறியமுடிகிறது. பெண்கள் ஒவ்வொரு நாட்டின் கண்கள். பெண்கள் இல்லையென்றால் மனிதக்குலமே இல்லை. ஆண்மகனின் கல்வி பொருள் தேவைகளுக்கு மட்டுமே தேவைப்படுகிறது. ஆனால் ஒரு பெண் கல்விக்கற்றால் அவள்

வாழ்வு உயர்வதுடன் அவளைச் சுற்றியுள்ள மற்றும் அடுத்த தலைமுறையும் கல்விப்பெற்று உயர்கின்றனர். கல்வி இளம் வயதில் திருமணம் செய்வதற்கான வாய்ப்புகளைக் குறைக்கின்றன.

பெண் கல்வி சமூக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, ஆரோக்கியமான குடும்பத்தை உருவாகின்றன. பெண்கல்வி என்பது ஒரு பெண்ணின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் மிக முக்கியமான முதலீடாகும். இதுமட்டும் இல்லாமல் மன உறுதியுடனும், தையரியத்துடனும் விளங்குவதற்கு அச்சாணியகவும், ஆயுதமாகவும் கல்வி பயன்படுகிறது. இன்றயக்காலக்கட்டத்தில் ஆண்களைக்காட்டிலும் பெண்கள் கல்வியில் முன்னேற்றம் காணமுடிகிறது. அதுமட்டுமில்லாது பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கமும் நிறைய சலுகைகள் செய்து வருகின்றன.

## References

இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, ராஜம் கிருஷ்ணன், 2006, சென்னை

குடும்ப விளக்கு, பாவேந்தர் பாரதிதாசன், மணிவாசகம் பதிப்பகம், 2002. சென்னை

பகுத்தறிவு:2-9-1934, அ. இறையன், இதழாளர் பெரியார், ப.246.

தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியம், முனைவர் தேவிரா இராஜேந்திரன், ஸ்ரீநந்தினி பதிப்பகம், 2018.

சுயமரியாதை இயக்க வீராங்கனைகள், இரண்டு தொகுதி, மு.வளர்மதி, கருப்பு ப்ரதிகள் வெளியீடு, 2007.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License